18-09-2025.
O.S.No. 29/2022

வா. சா. 2 எட்வின் பிரபாகரன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை 1ம் வாதி சொல்லித் தாக்கல் செய்தேன் என்றால் இருவரும் சேர்ந்துதான் தாக்கல் செய்தோம். நிரூபணவாக்குமூலத்தில் கண்ட விலாசத்தில்தான் தற்போதுவரை குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் வாதி பிரான்சிஸ் சவரியார் வால்பாறை, மேட்டுக்கரை, அய்யம்பாளையம் என்ற முறையில் வசிக்கிறார் என்றால் சரிதான். 1ம் வாதி எனது மைத்துனர் என்றால் சரிதான். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். 1ம் வாதி எலக்ட்ரீசியனாக இருக்கிறார். நான் தற்போது காங்கேயம் குளோபல் மெட்ரிக்குலேசன் பள்ளியில் மாதம் ரூ.20000ம் வருமானத்திற்கு வேலை பார்த்து வருகிறேன். மேற்படி பள்ளியில் வேலை பார்க்கிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணமாகத்தான் கொடுத்தேன். பிரதிவாதிக்கு ரூ.10 லட்சத்தை இரண்டு தவணைகளாக ரூ.6,00,000 ரூ.4,00,000/- என கொடுத்தேன். ஜூலை மாதம் 2021ம் வருடம் ரூ.6 லட்சமும், செப்டம்பர் மாதம் ரூ.4 லட்சமும் கொடுத்தேன். மேற்படி தொகையை நானும் 1ம் வாதியும் சேர்ந்துதான் கொடுத்தோம். வாதசாஆ.3 ஆவணத்தில் அட்வான்ஸ் தொகை ரூ.10 லட்சம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 3 வது பக்கத்தில் ஜூலை மாதம் ரூ.6 லட்சம் கொடுத்ததாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். 22.06.2021ம் தேதி ரூ.6 லட்சம் கொடுத்ததாகவும், நாளது தேதியில்

அதாவது 30.06.2021ம் தேதி ரூ.4 லட்சம் கொடுத்ததாக வாதசாஆ.3ல் கண்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ.4 கிரைய ஒப்பந்தம் 28.9.2021ம் தேதி ஏற்பட்டது என்றால் சரிதான். வாதசாஆ.4 கிரைய அட்வான்ஸ் தொகை ரூ.10 லட்சம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ.4ல் 22.06.2021ம் தேதி ரூ.6 லட்சமும் நாளது தேதியில் ரூ.4 லட்சமும் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாதசாஆ.3, 4 ஆவணங்களின்படி மொத்தம் ரூ.14 லட்சம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. ரூ.10 லட்சம்தான் கொடுத்துள்ளோம். 22.06.2021ம் தேதி ரூ.6 லட்சம் கொடுத்ததை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் தானமாக கொடுத்த சொத்து ஆகும். நான் இவ்வழக்கை இடத்தை கொடுக்கச்சொல்லி தாக்கல் செய்துள்ளேன். சொத்தின் மொத்த விஸ்தீரணம் 72 செண்ட். முக்கால் ஏக்கர் இருக்கும். தாவாச்சொத்து நொச்சோடைப்பட்டியில் உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண், நான்குமால் ஆகிய விவரங்கள் தெரியுமா என்றால் சர்வே எண்.771/1. நான்குமால் ஞாபகமில்லை. தெரியவில்லை. வாதசாஆ.3, 4 ஆவணங்களில் மொத்தம் 6 நபர்கள் கையெழுத்து போட்டுள்ளோம். சாட்சிகளாக எத்தனை பேர்கள் கையெழுத்து போட்டார்கள் என்பது எனக்கு தெரியவில்லை. வாதசாஆ.,3, 4 ஆவணத்தை எழுதுவதற்கு பத்திரத்தாள்கள் சாணார்பட்டி சப்ரிஜிஸ்ட்ரார் அலுவலத்தில் வாங்கப்பட்டது. யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி இரண்டு ஆவணங்களும் சாணார்பட்டி சப்ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் முன்பு பத்திரம் எழுதுபவரிடம் வைத்து

எழுதப்பட்டது. பிரதிவாதி எந்த வங்கியில் எவ்வளவு கடன் பெற்றிருந்தார் என்பதை குறிப்பிட்டு பிராதிலோ, என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லைஎன்றால் சரிதான். கனரா வங்கியில் ஆவணங்களை கொடுத்துள்ளார் என்பது மட்டும் தெரியும். என்னென்ன ஆவணங்கள் கொடுத்திருந்தார் என்பது தெரியாது. பிரதிவாதிக்கு வங்கிக்கடன் எதுவும் இல்லை என்றும், அவர் ரூ.4 லட்சம் மட்டும்தான் எங்களிடம் கடன் பெற்றார் என்றும், நாங்கள் தவறுதலாக வாதசாஆ.3, 4 ஆவணங்களை தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களிடம் வட்டிக்காக பணம் கடன் எதுவும் கேட்கவில்லை. நாங்கள் கொடுக்கவில்லை. நாங்கள் அனுப்பிவைத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி அனுப்பிவைத்த பதில் அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. பிராதில் சொல்லியுள்ள சொத்துவிவரமும், வாதசாஆ.3, 4 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துவிவரமும் வேறுபடுகிறது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் சுவாதீன அனுபவத்தில் நாங்கள் இல்லை என்றால் சரிதான். 02.10.2021 ம் தேதி சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி எங்கள் வசம் ஒப்படைத்தாக சொன்னால் தவறு என்றால் எனக்கு தெரியவில்லை. கிரைய பாக்கித்தொகை ரூ.2 லட்சத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நாங்கள் கிரையம் முடிப்பதற்கு தயாராக இருந்ததாகவும் பிரதிவாதி வர மறுத்ததாகவும் வாதசாஆ.4 ல் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வாதசாஆ.3, 4 ஆவணங்களில் பாக்கி கிரைய தொகையை ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வதாக எழுதப்பட்டுள்ள நிலையில் நாங்கள் அத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு

செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தொகை கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரணா காலம் என்றால் கொரணா முடிவடைந்த காலம். அந்த காலகட்டத்தில் அரசு வெளியே யாரும் போகக்கூடாது என தடை விதித்திருந்தது என்றும் அதனால் நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு நாங்கள் கிரைய தொகையை கொடுத்து கிரைய ஒப்பந்தம் எழுத வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் நகையை வங்கியில் அடகு வைத்தேன் என்றால் பிரதிவாதிக்கு 6 வது மாதம் பணம் கொடுத்துள்ளோம். அதற்கு முன்னர் நகையை அடகு வைத்துள்ளோம். தேதி ஞாபகமில்லை. நகையை அடமானம் வைத்தற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நகையை ரூ.4 லட்சத்திற்கு அடமானம் வைத்தேன். நாகல் நகர், கனரா வங்கியில் அடமானம் வைத்தேன். 1ம் வாதி ரூ.6 லட்சம் கொடுத்தார். அந்த காலகட்டத்தில் 1ம் வாதி வால்பாறையில் இருந்தார் என்றால் சரிதான். மொத்தம் இரண்டு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம். வாதசாஆ.3, 4 ஆவணங்களுக்கு வாசகங்கள் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் நாங்கள் சொல்லி தயாரிக்கப்பட்டது. எனக்கு வேறு சொத்து எதுவும் இல்லை. வங்கியில் வைப்பீடு எதுவும் இல்லை. எனக்கும் என் மைத்துனருக்கும் ரூ.10 லட்சம் கொடுக்கும் அளவுக்கு தகுதியில்லை என்றும், பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வாதசாஆ.3, 4 ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது, அனுப்பி வைத்துள்ள அறிவிப்பு, வாதசாஆ.3, 4 ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் முன்னுக்குப்பின் தவறாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. வாதசாஆ.3,4 கிரைய ஒப்பந்த

ஆவணங்கள் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்றால் பிரதிவாதியின் அசல் ஆவணங்கள் வங்கியில் இருப்பதாகச் சொன்னதால் பதிவு செய்யவில்லை. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்தில் பிரதிவாதி இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

மறு விசாரணை –இல்லை

A
MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.09.18 17:42:40 +0530

Principal District Judge,
Dindigul.